
# குழந்தையை கையகப்படுத்துதல்






## குழந்தைகள் நல காவல் அலுவலரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

1. குழந்தைகளின் உரிமைகளை அங்கீகரித்து பாதுகாக்கும் அனைத்துச் சட்டங்களையும் அறிவிப்புகளையும் நன்கு அறிந்திருங்கள்.
2. சட்டத்திற்கு முரணானதாகக் கூறப்படும் கையகப்படுத்தப்பட்ட குழந்தையை 24 மணி நேரத்திற்குள் சிறார் நீதிக் குழுமம் முன் ஆஜர்படுத்துங்கள். - பிரிவு 10, JJ Act, 2015
3. பிரிவு 13, JJ Act, 2015 - கையகப்படுத்தப்பட்ட குழந்தையின் பெற்றோருக்கு தகவல் தெரிவியுங்கள்.
4. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தையை குழந்தைகள் நலக் குழுவின் முன் ஆஜர்படுத்துங்கள். - பிரிவு 31, JJ Act, 2015
5. படிவம் 1 இன் படி சட்டத்துடன் முரண்பட்ட குழந்தையின் சமூகப் பின்னணி அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். (விதி 2(XVI) மாதிரி விதிகள், 2016)
6. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களையும் விசாரணை செய்ய வேண்டும்.
7. அதன் அதிகார எல்லைக்குள் உள்ள குழந்தைகளின் நலன் தொடர்பான விஷயங்களில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, சிறார் நீதிக் குழுமம் மற்றும் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுங்கள்.



8. குழந்தைகளுக்கு சட்ட உதவி வழங்க மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுங்கள்.
9. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுங்கள். - பிரிவு 8(k) மற்றும் 8(l), JJ Act, 2015
10. அங்கீகரிக்கப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், தகுதியான வசதிகள், தகுதியுள்ள நபர்கள், குழந்தைகளுக்கான தங்குமிடங்கள் ஆகியவற்றின் பட்டியல்களில் இறுதியாக வெளிவந்த பட்டியல்களை தெரிந்துக் கொள்ளுங்கள்.
11. குழந்தைகள் பிரிவுடன் கூடிய அரசு மருத்துவமனைகளின் பட்டியலுடன் தயாராக இருங்கள்.
12. சிறார் நீதிக் குழுமம் மற்றும் குழந்தைகள் நலக் குழுவிற்கு ஒரு குழந்தையை ஒரு தகுதியுள்ள வசதி/ தகுதியுள்ள நபரிடம் இருந்து மற்றொருவருக்கு மாற்றுவதில் உதவுங்கள்.
13. மறுவாழ்வு மற்றும் பாதிக்கப்பட்ட இழப்பீடு உள்ளிட்ட பிற விஷயங்களில் சிறார் நீதிக் குழுமம் மற்றும் குழந்தைகள் நலக் குழுவுக்கு உதவுங்கள்.
14. குழந்தையை கண்ணியம், கருணை மற்றும் மரியாதையுடன் நடத்துங்கள்.

## குழந்தைகள் நல காவல்துறை அலுவலர் / சிறப்பு சிறார் காவல் பிரிவு கீழ்க்கண்டோர்க்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்

### 1 பெற்றோர்/பாதுகாவலர்

- குழந்தை கையகப்படுத்தப்பட்டதைக் குறித்து சொல்லுங்கள்
- சிறார் நீதிக் குழுமத்தின் முகவரியைக் கொடுத்து அவர்களை சிறார் நீதிக் குழுமத்தின் முன் ஆஜராகச் சொல்லுங்கள்
- சமூகப் பின்னணி அறிக்கையைத் தயாரிப்பதில் ஒத்துழைப்பைக் கேளுங்கள்

### 2 நன்னடத்தை அலுவலர்

- குழந்தை கையகப்படுத்தப்பட்டதைக் குறித்து சொல்லுங்கள்
- சமூக விசாரணை அறிக்கையை தயாரிப்பதற்கு வசதி செய்ய சொல்லுங்கள்.

### 3 மாவட்ட சட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

- குழந்தை கையகப்படுத்தப்பட்டதைக் குறித்து சொல்லுங்கள்
- குழந்தைக்கு இலவச சட்ட உதவி கிடைக்க உதவுங்கள்

### 4 குழந்தைகள் நல அலுவலர் / வழக்கு பணியாளர்

- குழந்தை கையகப்படுத்தப்பட்டதைக் குறித்து சொல்லுங்கள்



## ஒரு குழந்தையை கையகப்படுத்தும் காவல்துறை அலுவலரின் கடமைகள்

- ✗ குழந்தையை போலீஸ் லாக்கப்பிற்கு அனுப்பாதீர்கள்
- ✗ குழந்தை CWPOவிடம் ஒப்படைக்கப்படுவதை தாமதப்படுத்தாதீர்கள்.
- ✗ குழந்தைக்கு கைவிலங்கு, கைகட்டு, சங்கிலிக்கட்டு போடாதீர்கள்.
- ✗ குழந்தை மீது எந்த வற்புறுத்தலையோ அல்லது பலத்தையோ பயன்படுத்தாதீர்கள்.
- ✗ குழந்தையை தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தாதீர்கள்
- ✗ எந்த அறிக்கையிலும் கையெழுத்திட குழந்தையைக் கேட்காதீர்கள்

- ✓ விதி 9, ஜேஜே மாதிரி விதிகள், 2016 இன் படி மட்டுமே கைது செய்யப்பட்ட குழந்தையை கண்காணிப்பு இல்லத்திற்கு அனுப்புங்கள்.
- ✓ குழந்தைக்கு அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நேரடியாகவும் உடனடியாகவும் தெரிவியுங்கள்.
- ✓ குழந்தைக்கு FIR (பதிவு செய்யப்பட்டிருந்தால்) நகலை வழங்குங்கள்.
- ✓ கைது செய்யப்பட்ட குழந்தையின் பெற்றோர்/பாதுகாவலரிடம் போலிஸ் அறிக்கையின் நகலை வழங்குங்கள்.
- ✓ காவல் நிலையத்தில் உள்ள SJPU/ குழந்தை நட்பு வளாகம்/ குழந்தை நட்பு மூலையில் மட்டுமே குழந்தையை நேர்காணல் செய்யுங்கள். நேர்காணலின் போது பெற்றோர் அல்லது பாதுகாவலரை இருக்க விடுங்கள்.
- ✓ மருத்துவ உதவி, மொழிபெயர்ப்பாளர்/சிறப்புக் கல்வியாளர், தேவைக்கேற்ப வேறு ஏதேனும் உதவிகளை வழங்குங்கள்
- ✓ குழந்தைக்கு இலவச சட்ட உதவி வழங்க மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் தெரிவியுங்கள்.




# என் கதை கேளுங்கள் !

அது மாற்றத்தை ஏற்படுத்தும்

## LISTEN TO US!

It Will Make a Difference



## குழந்தைகள் நல காவல் அலுவலருக்கான சிற்றேடு

தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பயிலகம்
சென்னை - 600 028